| D–8043 |
|---|

| Sub. Code |
|---|
| 10711 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘குயில் பாட்டு’ கதை மாந்தர்களில் இருவரைக் கூறுக.

2. கவிஞர் மீராவின் இயற்பெயரைக் குறிப்பிடுக.

3. கவிஞர் இளம்பிறை படைத்த நூல்களில் இரண்டினைச் சுட்டுக.

4. ‘சிலக் ஸ்மிதா என்ற விஜயலெட்சுமிக்காக’ என்னும் தலைப்பில் கவிதை எழுதியவர்?

5. வகுப்பறையில் அமர வைக்கத் தவறி நெருப்பறையில் பெண்களை நிற்க வைப்பது எது?

6. கம்பர் என்னும் நூலின் மூன்று பகுப்புக்களைக் குறிப்பிடுக.

7. ‘பொன்னகரம்’ சிறுகதையின் மாந்தர்களைச் சுட்டுக.

8. ராஜம்கிருஷ்ணன் படைப்புகள் இரண்டினைத் தருக.

9. அகிலன் கண்ணனின் ‘திருஷ்டி பரிகாரம்’ நாவலின் கதைக்களம் யாது ?

10. ‘அளம்’ என்பதன் பொருள் யாது ?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குயில்பாட்டில் காணலாகும் வேதாந்தக் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழின் இனிமையைப் பாரதிதாசன் எங்ஙனம் சுட்டியுரைக்கிறார் ?

12. (அ) ‘தமிழ்ப்பற்று’ கவிதையில் கவிஞர் மீரா பேசும் கருத்துக்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) இந்தியாவின் நிலையை மு. மேத்தா எங்ஙனம் எடுத்துரைக்கின்றார் ?

13. (அ) ‘ஹைக்கூ’ கவிதைக்கு இலக்கணத்தைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) காப்பியத்தின் முழுப்பார்வை குறித்து வ. சுப. மாணிக்கம் கூறுமாற்றை எழுதுக.

14. (அ) ‘இன்னொரு காந்திக்காக’ நாடகத்தின் கதைச்சுருக்கத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) ‘தமிழச்சி’ சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தைச் சுட்டியுரைக்க.

15. (அ) ‘பற்பசைக்குழாயும் நாவல் பழங்களும்’ கதை பேசும் சமூகக் கருத்துக்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) ‘வீட்டின் மூலையில் சமையலறை’ கதைப் போக்கை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் <u>மூன்றனுக்குக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.

16. மாங்கனி குறுங்காவியத்தின் தனித்துவத்தைப் புலப்படுத்துக.

17. தற்காலக் கவிஞர்களின் பாடுபொருட்களை நும் பாடப் பகுதியால் விளக்குக.

18. கம்பனின் கவித்திறனை வ. சுப. மாணிக்கம் விளக்குமாற்றை எழுதுக.

19. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

20. ‘அளம்’ புதினம் பேசும் பெண் உழைப்பாளர்களின் வாழ்க்கையை விவரிக்க.

| D–8044 |
|---|

| Sub. Code |
|---|
| 10712 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

First Semester

இலக்கணம் நன்னூல் எழுத்து

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு விடை தருக.

1. நன்னூலின் ஆசிரியர் யார்?

2. வினா எழுத்துக்களைக் குறிப்பிடுக.

3. நிகழ்கால இடைநிலைகள் எவை?

4. பகுதி என்றால் என்ன?

5. இறந்தகால இடைநிலைகளைக் கூறுக.

6. விகாரப் புணர்ச்சியின் வகைகள் யாவை?

7. பகுபத உறுப்புகளைக் குறிப்பிடுக.

8. குற்றியலுகரம் - குறிப்பு வரைக.

9. நன்னூலார் குறிப்பிடும் குற்றங்கள் எத்தனை வகைப்படும்.

10. அலுவல் கடிதங்கள் (official letter) என்றால் எனன?

## பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நூலிற்கு அமைய வேண்டிய பத்துவகை அழகுகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சூத்திரம் என்பது குறித்து நன்னூலாரின் கருத்துக்களை விளக்குக.

12. (அ) நூலின் மாண்பு குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) நல்லாசிரியரின் இலக்கணம் பற்றி எழுதுக.

13. (அ) முக்கலாத்திற்கான வினை இடைநிலைகளைச் சுட்டி உரைக்க.

(அல்லது)

(ஆ) வாழிய என்பது புணருமாற்றை விளக்குக.

14. (அ) மொழி முதல் எழுத்துகள் குறித்து நன்னூலாரின் கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சுட்டு மற்றும் வினா எழுத்துக்களை விரித்துரைக்க.

15. (அ) பிறப்பின் பொது விதி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழி முதல் போலி - மொழி இடைப்போலி பற்றி விளக்குக.

## பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் <u>மூன்றனுக்குக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.

16. மாணாக்கருக்கான இலக்கணமாகப் பவணந்தியார் கூறுமாற்றை விளக்குக.

17. எழுத்தும் எழுத்தின் வகையும் குறித்துக் கட்டுரைக்க.

18. புணர்ச்சியின் பொது இலக்கணத்தைச் சான்றுகளுடன் விவரிக்க.

19. பெயர்-பொது இலக்கணத்தைக் கூறி விரித்துரைக்க.

20. கடிதத்தின் பயன்களை நும் பாடப்பகுதிக் கொண்டு விவரிக்க.

| D–8045 |
|---|

| Sub. Code |
|---|
| 10713 |

DISTANCE EDUCATION

B.Lit. (TAMIL) DEGREE EXAMINATION, MAY 2025.

First Semester

தமிழக வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ marks)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தமிழர்கள் நிலத்தை எங்ஙனம் வகைப்டுத்தி வாழ்ந்தனர்?

2. 'திராவிடச் சங்கம்' என்னும் சங்கத்தை நிறுவியவர் யார்?

3. கல்வெட்டுகளில் 'மெய்க்கீர்த்திகள்' எழுதும் முறையைக் கொண்டு வந்த அரசன்?

4. பண்டையக் காலத்தில் 'குலபதி' என்னும் பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது?

5. 'நந்திக்கலம்பகம்' யார் மீது பாடப்பட்ட இலக்கியம்?

6. 'சமண காஞ்சி' என அழைக்கப்படும் இடம் யாது?

7. 'சுங்கம் தவிர்த்த சோழன்' யார்?

8. 'சோனாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன்' எனப் போற்றப்படுபவன்?

9. யார் காலத்தில் மூக்கறுப்புப் போர் நடைபெற்றது?

10. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலின் ஆசிரியர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பண்டையத் தமிழர்களின் நிலப் பாகுப்பாட்டை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சங்க கால மூவேந்தர்களின் செல்வாக்கும் ஆட்சியும் பற்றி விவரிக்க.

12. (அ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம் பெற்ற நன்மைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) நரசிம்மவர்ம பல்லவனின் ஆட்சியில் நிகழ்ந்தவைகளைச் சுருக்கி வரைக.

13. (அ) பிற்காலப் பாண்டியர்களின் எழுச்சி வரலாற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சோழர்கால ஊராட்சி முறையைச் சான்றுகள் தந்து விளக்குக.

14. (அ) நாயக்கர் காலப் பாளையப்பட்டு ஆட்சி முறைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழக வரலாற்றில் 'இராணி மங்கம்மாள்' பெறும் சிறப்பிடத்தைச் சுட்டுக.

15. (அ) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரக வரலாற்றைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) ஆங்கிலயர் வரவால் தமிழகம் பெற்ற நன்மைகளை விளக்குக.

பகுதி இ — $(3 \times 10 = 30)$

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றாதாரங்களைச் சுட்டியுரைக்க.

17. பல்லவர்களின் ஆட்சியியல் கலைகள் வளர்நததமையைக் கட்டுரைக்க.

18. முதல் இராசராச சோழனின் தனிச்சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

19. தமிழகத்தில் இஸ்லாமியர் எழுச்சிக்கான காரணங்களைப் புலப்படுத்துக.

20. இந்திய சுதந்தரப் போராட்டமும் தமிழகமும் குறித்து விளக்கி வரைக.

**D–8046**

**Sub. Code**
**10714**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

First Semester

சிற்றிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. கல்லாடம் குறித்து வழங்கும் பழமொழிகளைக் குறிப்பிடுக.

2. பாடல் புனையத் தொடங்கும் மங்கலச் சொற்கள் எவை?

3. நந்திவர்மன் பறையின் பெயரைக் கூறுக.

4. தலைவி நந்திவர்மனிடம் தூது விடுத்த பொருட்களைச் சுட்டுக.

5. கண்ணணின் நாவழித்த யாசோதை கண்டது யாது?

6. பெரு மாஉரலில் பிணிப்புண்டு இருந்து இரு மாமருதம் இறுத்த பிள்ளை யார்?

7. கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?

8. கடாரம் கொண்டான் என்ப்பெற்றவன்.

9. ஒட்டக்கூத்தர் பாடியவற்றுள் ஏனைய நூல்கள் இரண்டினைக் கூறுக.

10. குலோத்துங்கனுக்கு அஞ்சிய எமன் எவ்வுருவில் வந்தான்.

## பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழில் சிற்றிலக்கியம் பெற்றிருக்கும் வளர்ச்சியைச் சுருக்கி வரைக

(அல்லது)

(ஆ) சிவ பெருமான் தன்கோலம் மறைத்துப் பாண்டியனின் கோலம் பூண்டமையை விளக்குக.

12. (அ) நந்திக்கலம்பகத்தில் தூது உறுப்புக் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அறத்தொடு நிற்றல் குறித்து நந்திக்கலம்பகம் உரைப்பனவற்றை எழுதுக.

13. (அ) பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாடுவதற்கான காரணத்தை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கண்ணனுடன் விளையாட வராவிடின் நிலவுக்கு ஏற்படும் துயர்களைச் சுட்டுக.

14. (அ) கலிங்கத்துப்பரணி பேசும் கோயில் அமைப்பையும் வழிபாட்டையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) முதுபேய்கள் காட்டிய இந்திரசாலம் பற்றியச் செய்திகளை எடுத்தெழுதுக.

15. (அ) உலா விவரிக்கும் ஏழு பருவ மகளிர் குறித்து நிகண்டு விளக்குமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் காப்புத் தெய்வங்களைப் புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. வேழமுகக் கடவுளைக் கல்லாடம் போற்றும் திறத்தைத் தொகுத்துரைக்க.

17. நந்திவர்மனின் பெருமைகளைக் கலம்பகம் பாடுமாற்றை எழுதுக.

18. கண்ணனின் துருமேனியழகைப் பெரியாழ்வார் பாடுமாற்றை விவரிக்க.

19. கலிங்கத்துப்பரணியின் 'போர் பாடியது' தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

20. சோழர்களின் பெருமைகளை ஒட்டக்கூத்தர் ஒப்பிடுமாற்றைப் புலப்படுத்துக.

———————

| D–8047 |
|---|

| Sub. Code |
|---|
| 10721 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Second Semester

அற இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. திருக்குறள் நூல் எங்ஙனம் பகுக்கப்பட்டுள்ளது?
2. வள்ளுவர் உணர்த்தும் சிறந்த செல்வம் யாது?
3. பகைவர் மனத்தை மாற்றும் கருவி எது?
4. ‘நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி’ – குறிப்பு வரைக.
5. ‘பாம்பின் தலையை நக்கியது போல’ எதற்கு உவமைக் காட்டப்பட்டது?
6. யார் பிறன்மனையை விரும்பமாட்டார்?
7. திருமந்திரம் நூல் குறிப்பு தருக.
8. செம்பொருள் அடைவதற்குத் திருமூலர் கூறும் வழி யாது?
9. அடைக்கலம் கொடுத்தோரின் இயல்பைக் குமரகுருபரர் எங்ஙனம் சுட்டுகிறார்?
10. நீதிநெறி குறிப்பிடும் கேடு அறிவிக்கும் அடையாளங்கள் எவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திருக்குறள் பேசும் வாழ்வியல் அறங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உயர்குடிப் பிறந்தாரின் இயல்புகளை வள்ளுவர் வழி விளக்குக.

12. (அ) பெருமை அதிகாரம் எடுத்துரைக்கும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பண்புடையார் செயற்பாடுகள் குறித்து வள்ளுவர் கூறுமாற்றை வரைக.

13. (அ) பிறன்மனை கொண்டாரின் குணங்களை நாலடியார் வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தவப்பயன் பெறாதவர்களின் நிலையை நாலடியார் எங்ஙனம் உரைக்கின்றது?

14. (அ) சான்றோரின் கடமைகளாகப் பழமொழிநானூறு பேசுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) முன்றுறையர் கூறும் சிறந்த நண்பரின் அடையாளங்களைக் கூறுக.

15. (அ) இறந்தாரின் சுற்றத்தார் செயல்களைத் திருமூலர் எங்ஙனம் விவரிக்கின்றார்?

(அல்லது)

(ஆ) கற்றோருக்குரிய தகுதிகளாகக் குமரகுருபரர் கூறுவனவற்றை எடுத்தெழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தனிமனித ஒழுக்கம் குறித்த வள்ளுவரின் கருத்துக்களைக் கட்டுரைக்க.

17. நாலடியார் கூறும் அறத்தால் விளையும் நன்மைகளைப் பட்டியலிடுக.

18. முன்றுறை அரையனார் பேசும் கல்வியின் சிறப்புகளை எடுத்துரைக்க.

19. நிலையாமை குறித்த திருமூலரின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. நீதியொழுகா மாந்தர் நிலைப்பாடுகளைக் குமரகுருபரர் பாடுமாற்றை விவரிக்க.

| D–8048 |
|---|

| Sub. Code |
|---|
| 10722 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Second Semester

இலக்கணம் : நன்னூல் சொல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours — Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. சொல்லின் பொது இலக்கணம் யாது?

2. பால்பகா அஃறிணைப் பெயர் என்றால் என்ன?

3. மூவிடப் பொதுப் பெயர்கள் யாவை?

4. வேற்றுமை என்றால் என்ன?

5. செய்யுளில் திரியும் வேற்றுமை உருபுகள் யாவை?

6. தெரிநிலை வினையின் இலக்கணம் யாது?

7. இருதிணைப் பொதுவினை என்றால் என்ன?

8. தொகாநிலைத் தொடர்கள் யாவை?

9. மரபு என்றால் என்ன?

10. ‘ஈ, தா, கொடு’ பயன்படுத்தும் முறையைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) உயர்திணை – அஃறிணைப் பாகுபாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) உயர்திணை ஆண்பாற் பெயர்களைத் தொகுத்தெழுதுக.

12. (அ) தொழிற்பெயர் வினையாலணையும் பெயர் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமையை விவரிக்க.

13. (அ) வினை வகைகளைப் பகுத்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வினையெச்சம் அதன் பாகுபாடு குறித்தெழுதுக.

14. (அ) வழுக்களின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆறுவகை வினாக்களைச் சான்றுடன் கூறுக.

15. (அ) இடைச் சொல்லின் பொது இலக்கணத்தை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழில் அரைப்புள்ளி, முக்காற்புள்ளி பயின்றுவரும் இடங்கள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடையளிக்க.

16. சொற்பாகுபாட்டினை விளக்கி வரைக.

17. வினைமுற்று குறித்து விவரித்தெழுதுக.

18. பத்து வகை எச்சங்களைச் சான்றுடன் விளக்குக.

19. வழு - வழாநிலை - வழுவமைதியை உதாரணங்கள் மூலம் விவரிக்க.

20. எண்ணிடைச் சொற்களைச் சான்றுகளுடன் விளக்கி வரைக.

---

| D–8049 |
|---|

| Sub. Code |
|---|
| 10723 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Second Semester

தமிழ் மொழி வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. மொழியின் வளர்ச்சியை அறிய உதவும் சான்றாதாரங்கள் எவை?

2. தொல்காப்பியத்தின் சார்பு நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. மிடற்றுப் பிறந்த வளி - இதில் 'வளி' என்பதன் பொருள் யாது?

4. சதுரகராதி - குறிப்பு வரைக.

5. கல் + தீது – எவ்வாறு புணரும்?

6. கலைச்சொல் என்றால் என்ன?

7. மொழிபெயர்ப்பின் உயிர்த்துடிப்பு என எதனைக் கருதுகின்றனர்?

8. 'மலாடு' என்ற ஊர் தற்காலத்தில் எங்ஙனம் அழைக்கப்படுகின்றது?

9. பால்சுட்டும் விகுதிகளைச் சுட்டுக.

10. 'வட்டெழுத்து' பற்றி எந்தக் கல்வெட்டில் குறிப்புக் காணப்படுகின்றது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கல்வெட்டுக்கள் எழுதப்படும் முறைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய வேற்றுமை உருபுகளின் பொருண்மைகளை விளக்கி வரைக.

12. (அ) திராவிட மொழிகளைப் பகுத்துப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைச் சான்றுடன் விளக்குக.

13. (அ) வடமொழிச் சொற்களைத் தமிழாக்கும் வகையை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) மராட்டியச் செப்பேடுகளில் காணப்படும் சொற்கள் குறித்துச் சுட்டியுரைக்க.

14. (அ) கலைச்சொல்லாக்கத்தில் ஒலிபெயர்ப்பின் தேவையை உணர்த்துக.

(அல்லது)

(ஆ) கிளைமொழிகளையும் அதன் பகுதிகளையும் சுட்டியுரைக்க.

15. (அ) எழுத்துச் சீர்த்திருத்தம் செய்த சான்றோர்கள் குறித்து விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) இணையப் பயன்பாட்டில் 'தமிழ்' பெற்றிருக்கும் வளர்ச்சியைப் புலப்படுத்துக.

## பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஏதேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொல்காப்பியம் பேசும் சிறப்பொலிகள் குறித்துக் கட்டுரைக்க.

17. சோழர் காலத்தில் தமிழ்மொழி அடைந்த மாற்றங்களை விளக்குக.

18. தமிழில் மொழிபெயர்ப்புப் பெற்றிருக்கும் வளர்ச்சியைப் புலப்படுத்துக.

19. கரிசல் வட்டார வழக்கின் இயல்புகளை விளக்கி வரைக.

20. ஊடக மொழியாடல்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்துரைக்க.

———————

| D–8050 |
|---|

| Sub. Code |
|---|
| 10724 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Second Semester

திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. திராவிட மொழியின் மூன்று பிரிவுகள் யாவை?

2. மலபார் தலைவர் என்பதன் பொருள் யாது?

3. பகர ஒலி கன்னடத்தில் எவ்வாறு திரிந்தொலிக்கிறது?

4. உயர்திணை அஃறிணைகள் தெலுங்கு மொழியில் எவ்வாறு வழங்கப்படும்?

5. தமிழில் உகர இறுதி எண்ணுப்பெயர்கள் எவ்வெச் சாரியைகளைப் பெறும்?

6. ஒன்று என்னும் எண்ணுப் பெயர்களின் அடைகள் யாவை?

7. பேச்சில் நிகழ்வு எதிர்வுகாலங்களுக்கு ஒரே வடிவத்தைக் கையாளும் மொழிகள் எவை?

8. திராவிட மொழிகளில் பெயரெச்ச வடிவங்கள் தெளிவின்றி உள்ள மொழி எது?

9. விகுதி குன்றிய தொழற்பெயருக்குச் சான்றுகள் தருக.

10. வினைப் பெயர் என்பது யாது?

## பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திராவிடம் என்ற சொல்லாட்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தென் திராவிட மொழிகள் குறித்து எழுதுக.

12. (அ) நடுத்திராவிட மொழிகளின் சிறப்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) மூக்கின உயிர்களின் தன்மைகளை விளக்குக.

13. (அ) கருவிப் பொருள் வேற்றுமைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளில் தன்மை பன்மைகள் பற்றி எழுதுக.

14. (அ) இயக்க வினை என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) செயப்பாட்டு வினைகுறித்து எழுதுக.

15. (அ) செயலெஞ்சு வினை என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளில் பெயரடைகள் பெறும் இடம் குறித்து எழுதுக.

## பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. திராவிட மொழிகளின் தனித்தன்மைகளை ஆராய்க.

17. மெய்யொலி மாற்றத்தில் சொல்லாக்க மரபுகள் பற்றி எடுத்துரைக்க.

18. எண் உணர்த்தலும் வேற்றுமைகளும் என்ற தலைப்பில் கட்டுரை தருக.

19. வினைச்சொற்கள் காலம் காட்டும் முறைகளை விளக்கியுரைக்க.

20. திராவிட மொழிகளின் சொற்றொடர் அமைப்பு முறைகளை விவரித்தெழுதுக.

---

| D–8051 |
|---|

| Sub. Code |
|---|
| 10731 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Third Semester

சமய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. 'தமிழ் ஆகமம்' என அழைக்கப்படும் சைவ சித்தாந்த நூல் யாது?

2. ஆண்டாளின் இயற்பெயரைக் குறிப்பிடுக.

3. திருநாவுக்கரசரின் பதிகங்கள் எத்திருமுறைகளில் அமைந்துள்ளன?

4. "முன்சேர் தென்னர் சேரர்சோழர்கள் தாம் வணங்கும் திருப்பூவணம்" எனப் பாடியவர்?

5. 'யாத்திரை பத்து' இயற்றியவர்?

6. வள்ளலார் ஞான சபை அமைத்த இடத்தைக் குறிப்பிடுக.

7. திருவண்ணாமலைத் திருத்தலத்தைப் பாடிய சமயக்குரவர்கள் இருவரைச் சுட்டுக.

8. ‘நால்வர் மணி மாலை’ என்னும் நூலை இயற்றியவர்?

9. குணங்குடி மஸ்தான் சாகிபை மக்கள் எங்ஙனம் அழைத்தனர்?

10. இரட்சண்ய யாத்திரிகம் நூலின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திருமூலர் வரலாற்றை நும் பாடப் பகுதி கொண்டு எழுதுக.

(அல்லது)

(ஆ) பாவை நோன்பு கடைப்பிடிக்கும் முறைகளை ஆண்டாள் பாடலால் விளக்குக.

12. (அ) திருஆலவாய்ப் பதிகம் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருப்புத்தூரின் இயற்கை வளங்களை ஞானசம்பந்தர் பாடுமாற்றை எழுதுக.

13. (அ) திருநாவுக்கரசர் பாடிய திருப்பூவணப் பதிகச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருவார்த்தைப் பதிகக் கருத்துக்களை எடுத்துரைக்க.

14. (அ) தவத்தின் சிறப்பைக் குதம்பைச் சித்தர் பாடுமாற்றை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இறைவன் விடமுண்டு உயிர்களைக் காத்தமையைச் சோணசைல மாலை வழி விளக்குக.

15. (அ) பராபரத்தின் இயல்பையும் இயக்கத்தையும் குணங்குடி மஸ்தான் வழிப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளைப் பாவமன்னிப்புக் கோருவதன் நோக்கத்தை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிவபெருமானின் பெருமைகளைத் திருமூலர் பாடுமாற்றைத் தொகுத்துரைக்க.

17. பாவை நோன்பால் உண்டாகும் பயன்களை ஆண்டாள் பாடல்கள் வழிச் சுட்டுக.

18. தனிமை துன்பத்தில் மாணிக்கவாசகர் பாடிய எண்ணப்பதிகத்தை விளக்கி வரைக.

19. வள்ளலாரின் தூய நெறியைத் தெய்வமணிமாலை பேசுமாற்றை எடுத்துரைக்க.

20. மஸ்தான் சாகிபு பேசும் தத்துவங்களைச் சான்றுகளால் நிறுவுக.

---

**D–8052**

| Sub. Code |
|---|
| **10732** |

DISTANCE EDUCATION

B.Lit (Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Third Semester

இலக்கணம் அகப்பொருளும் யாப்பும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ஒத்த அன்புடைய ஐந்திணைகள் எவை?

2. கைகோள் என்றால் என்ன?

3. அகப்பொருள் கூறும் கருப்பொருட்களின் எண்ணிக்கை?

4. களவின்கண் புரியும் பிரிவுகளைக் குறிப்பிடுக.

5. உடன்போக்கு எத்தனை வகைப்படும்?

6. தூது செல்வதற்குரிய கால எல்லை?

7. எச்சீர்களைப் பொதுச்சீர் என்பர்?

8. முதற்தொடைகளைக் குறிப்பிடுக.

9. நான்கு பாக்களுக்குரிய ஓசைகளைச் சுட்டுக.

10. "தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே

 நாவினால் சுட்ட வடு"– இத்திருக்குறளில் 'வடு' என்ற சொல்லை அலகிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கைக்கிளை, ஐந்திணை , பொருந்திணை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) திணை அடிப்படையில் உரிப்பொருளை எடுத்தெழுதுக.

12. (அ) களவு காலக் குறியிடங்கள் பற்றியச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அறத்தொடு நிற்றலுக்கான நிலைகளைப் புலப்படுத்துக.

13. (அ) கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) அகப்பொருள் பேசும் கற்பு காலப் பிரிவுகளை வகைப்படுத்துக.

14. (அ) யாப்பருக்கலக்காரிகை கூறும் சீர்களை வகைப்படுத்தி விளக்குக.

(அல்லது)

(ஆ) சீர்களின் அடிப்படையில் யாப்பிற்கான அடிகளை வகைப்படுத்துக.

15. (அ) அந்தாதித் தொடை, செந்தொடை ஆகியவற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) யாப்பிலக்கணம் பேசும் பா வகைகளைக் கூறுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. அகத்திணைக்களுக்குரிய கருப்பொருட்கள் குறித்துக் கட்டுரைக்க.

17. வரைதலின் வகைகளையும் வரைவிற்குரிய கிளவிகளையும் விரித்துரைக்க.

18. அகப்பொருள் உணர்த்தும் பரத்தையிற் பிரிவின் வகைகளைப் புலப்படுத்துக.

19. கலிப்பாவின் உறுப்புகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

20. யாப்பருங்கலக்காரிகையின் ஒழிபியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————

| D–8053 |
|---|

| Sub. Code |
|---|
| 10733 |

DISTANCE EDUCATION

B.Lit. (TAMIL) DEGREE EXAMINATION, MAY 2025.

Third Semester

தமிழிலக்கிய வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. சங்க காலத் தமிழக எல்லையைக் கூறுக.

2. பாரதப் போரில் உணவளித்த தமிழ் மன்னன் யார்?

3. வெண்பா பாட்டியலை இயற்றியவர்?

4. 99 வகை பூக்களைப் பற்றி பேசும் சங்க நூல்?

5. ஆசராக்கோவையின் ஆசிரியர்?

6. மணநூல் என அழைக்கப்படும் பெருங்காப்பியம்?

7. கலம்பக உறுப்புகளின் எண்ணிகையைக் குறிப்பிடுக.

8. தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் என அழைக்கப்படுபவர்?

9. என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் என்று ஏங்கியவர்?

10. ‘ஆலாபனை' என்ற கவிதைத் தொகுதியின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழகத்தோடு வடஇந்தியா கொண்டிருந்த தொடர்பினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பிற்கால இலக்கண நூல்கள் பற்றி குறிப்புகளைத் தொகுத்தெழுதுக.

12. (அ) எட்டுத்தொகை அகநூல்கள் பற்றிய வரலாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருக்குறளின் சிறப்புகளைச் சான்றுகள் காட்டி விவரிக்க.

13. (அ) பெரியாழ்வார் வைணவத் தொண்டினையும் இலக்கியங்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) பிள்ளைத்தமிழின் பருவங்களைப் பட்டியலிட்டு விளக்குக.

14. (அ) ஐரோப்பியர் காலத்தில் உரைநடை வளர்ச்சியடைந்த வரலாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) நாவல் இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றை எடுத்துரைக்க.

15. (அ) பாரதிதாசன் சமூகச் சிந்தனைகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வைரமுத்துவின் இலக்கியப் பணிகளைச் சுட்டியுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்க இலக்கியத்தின் தனித்தன்மைகளை நும் பாடப் பகுதியால் விளக்குக.

17. களப்பிரர் காலத்தில் அறநூல்கள் தோற்றியமைக்கான காரணங்கள் புலப்படுத்துக.

18. சிலப்பதிகாரத்தின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

19. பன்னிருத் திருமுறை வரலாற்றை விளக்கி வரைக.

20. பரணி இலக்கியத்திற்கான உறுப்புகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

———————

| D–8054 |
|---|

| Sub. Code |
|---|
| 10734 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Third Semester

காப்பியம் இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                                  Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. ‘முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது அடிகள் நீரே அருளுக’ என்ற கூற்று யார் யாரிடம் கூறியது?

2. பாண்டியனின் பத்தினி வழிபாடு பற்றி குறிப்பிடும் நூல் எது?

3. விருத்தப்பாவில் அமைந்த காப்பியத்தைக் குறிப்பிடுக.

4. ஏமாங்கத நாட்டின் தலைநகர் யாது? அதன் அரசன் யார்?

5. ‘ஆழி சூழ் உலகமெல்லாம் பரதேஆன்’ – என்ற அடியில் இடம் பெறும் ‘ஆழி’ என்பதன் பொருளைக் குறிப்பிடுக.

6. கம்பராமாயணத்தின் வழிநூல்கள் இரண்டினைக் கூறுக.

7. ‘சீறத்’ என்பதன் பொருளைக் குறிப்பிடுக.

8. மானுக்குப்பிணை நின்றவர் யார்?

9. காப்பியத்தின் உறுதிப் பொருள்களைக் குறிப்பிடுக.

10. இறைவனுக்கு மனக் கோயில் கட்டியவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கோவலன் கண்ணகி திருமண நிகழ்வைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) வழக்குரை காதையில் கண்ணகியின் வாய்மொழிகளைச் சுருக்கி வரைக.

12. (அ) சீவக சிந்தாமணி உணர்த்தும் அறக்கருத்துக்களைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) கேமசரியார் பற்றி சோதிடன் உரைத்தவற்றை எழுதுக.

13. (அ) கைகேயி கொண்ட சினமும் தசரதன் மன்றாடலும் பற்றி வரைக.

(அல்லது)

(ஆ) இராமன் நகரை நீங்கும் நிகழ்வைக் கம்பர் மொழியால் கூறுக.

14. (அ) சேக்கிழார் வரலாற்றை நும் பாடப் பகுதியால் விவரிக்க.

(அல்லது)

(ஆ) தேம்பாவணி நூல் வரலாற்றைப் புலப்படுத்துக.

15. (அ) மானுக்குப் பிணையாய் நின்ற நபிகளின் கருணையை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாலைவனத்தின் மூன்று வழிகளை மரியாளுக்கு உரைக்கப்படுமாற்றை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிலப்பதிகாரம் பேசும் இந்திர விழா குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. கோவலனின் முற்பிறப்பு வரலாற்றைக் கட்டுரைக்க.

18. கேமசரியார் இலம்பகத்தின் கருத்துக்களைப் புலப்படுத்துக.

19. கம்பராமாயணம் அமைப்பும் சிறப்பும் பற்றி விவரிக்க.

20. பூசலாரின் பக்தி சிறப்பினைப் பெரியபுராணம் வழி எடுத்துரைக்க.

| D–8055 |
|---|

| Sub. Code |
|---|
| 10741 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Fourth Semester

கவிதை இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாரதிதாசனின் குறுங்காப்பியங்கள் இரண்டனைக் குறிப்பிடுக.

2. இதுபொறுப்பதில்லை தம்பி எரிதழல் கொண்டு வா - யார் கூற்று? யாரிடம் கூறியது?

3. பெ. சுந்தரம் பிள்ளை பெற்ற பட்டம் யாது?

4. உமர்கயாம் எந்த நாட்டுப் புலவன்?

5. கண்ணதாசன் பணியாற்றிய பத்திரிக்கைகள் யாவை?

6. மனிதனின் காவலன் எனச் சிற்பி எதனைக் குறிப்பிடுகிறார்?

7. அப்துல் ரகுமான் எழுதிய புதிய கவிதை வடிவங்கள் யாவை?

8. பிச்சமூர்த்தி யாரைப் பின்பற்றி புதுக்கவிதை எழுதினார்?

9. மரங்கள் சுவாசிப்பது எதற்கு என வைரமுத்து பாடுகிறார்?

10. கழனியூரானின் இயற்பெயர் யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) விகர்ணனின் பண்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் காண விரும்பும் புதிய உலகம் குறித்து எழுதுக.

12. (அ) குயவனுக்கும் மண்ணுக்கும் உள்ள தொடர்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) அமரவாழ்வு தருவது எது? விளக்குக.

13. (அ) தைப்பாவை - பெயர்காரணம் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) சிற்பி பாலசுப்பிரமணியனின் படைப்புலகம் குறித்து எழுதுக.

14. (அ) மௌனம் பற்றி அப்துல்ரகுமானின் சிந்தனைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பிச்சமூர்த்தி புதுக்கவிதையின் தந்தை என அழைக்கபடுவதற்கான காரணங்களை எடுத்துரைக்க?

15. (அ) சவகர்லாலின் பாவம் கவிதை உணர்த்தும் பண்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஹைகூக் கவிதைகளின் இலக்கணம் யாது? சான்றுகளுடன் புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடையளிக்க.

16. பாஞ்சாலி சபதம் உணர்த்தும் பெண்ணடிமை நிலையும் போராட்டமும் குறித்து விளக்கியுரைக்க.

17. சிக்கனம் கவிதை உணர்த்தும் உவமைத் திறனை ஆராய்க.

18. கண்ணாதாசனின் கவிதைச் சிறப்புகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

19. புதுக்கவிதை உலகில் பிச்சமூர்த்தி கவிதைகள் - என்னும் பொருண்மையில் கட்டுரை தருக.

20. தமிழ் ஹைகூக் கவிதைகளின் போக்குகளை நும் பாடப்பகுதி வழிப் புலப்படுத்துக.

———————

| D–8056 |
|---|

| Sub. Code |
|---|
| 10742 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Fourth Semester

இலக்கணம் – புறப்பொருளும் அணியிலக்கணமும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ஐயனாரிதனார் கூறும் புறத்திணைகளின் எண்ணிக்கை?

2. கையறுநிலை - விளக்கம் தருக.

3. கோட்டையை வெல்ல நடைபெறும் போர் எத்திணைக்குரியது?

4. 'கந்தழி' எந்நில அரசனைப் புகழ்ந்துரைக்கின்றது?

5. வேளாண் வகையின் சிறப்பைக் கூறுக.

6. பெருந்திணை - விளக்கம் தருக.

7. உவமை தோன்ற காரணமான மூவகை ஒப்புமைகள் எவை?

8. பின்வருநிலை அணியை விளக்கி எழுதுக.

9. சிலேடை அணி - சிறு குறிப்பு வரைக.

10. "சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

    சொல்லில் பயன்இலாச் சொல்" – இக்குறளில் அமைந்துள்ள அணி யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வெட்சித்திணைப் பேசும் ‘வெறியாட்டு’ பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) நெடுமொழி கூறலின் முக்கியத்துவத்தை விளக்கி வரைக.

12. (அ) வாள்நிலை, குடைநிலை ஆகியனவற்றை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) போர்க்களக் குரவைகள் பற்றி எடுத்துரைக்க.

13. (அ) உழிஞைப் போரில் பாசிநிலை, ஏணிநிலை பெறுமிடத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) போர்க்களத்தில் பாசறைகள் பெற்றிருந்த முக்கியத்துவத்தைச் சுட்டுக.

14. (அ) உருவக அணியைச் சான்றுகள் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அற்புதம், அதிசயம், ஒப்புமைக் கூட்டம் ஆகிய உவமைகளை விளக்குக.

15. (அ) தற்குறிப்பேற்ற அணியை இலக்கியச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) நுட்ப அணியின் இலக்கணத்தை வகையுடன் விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. புறப்பொருள் வெண்பாமாலை நூல் வரலாற்றைக் கட்டுரைக்க.

17. நடுகல் வழிபாடு குறித்துப் பொதுவியல் திணைப் பேசுமாற்றை விவரிக்க.

18. பாடாண்திணைப் பேசும் ஆற்றுபடை குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. உவமை அணியின் முக்கியத்துவத்தைச் சான்றுகளுடன் நிறுவுக.

20. தீவக அணியின் சிறப்பியல்புகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

———————

**D–8057**

| Sub. Code |
|---|
| **10743** |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Fourth Semester

நாட்டுப்புறவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. 'Folklore' என்ற சொல்லை 'நாட்டுப்புறவியல்' என மொழிபெயர்த்தவர்?

2. தமிழக நாட்டுப்புறவியலின் தந்தை என அழைக்கப்படுபவர்?

3. தாலாட்டு - சிறுகுறிப்பு வரைக.

4. 'பிசி' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது எதனை?

5. கும்மியின் வேறுபெயர்களைத் தருக.

6. ஒயிலாட்டத்தில் எத்தனை அசைவுகள் இடம்பெறும்?

7. மயானக் கொள்கை என்றால் என்ன?

8. 'சல்லி' என்பதன் பொருள் யாது?

9. புகழ்ப் பெற்ற மாட்டுச்சந்தைகள் இரண்டினை பெயரைத் தருக.

10. அறிதிற அறிவியல் என்பதை விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நாட்டுப்புறப் பாடல்களை வகைப்படுத்தி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒப்பாரி பாடல்களின் அமைப்பும் இயல்பும் குறித்து விளக்குக.

12. (அ) தமிழக நாட்டுப்புறக்கதை ஒன்றைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறக் கும்மியின் முக்கியத்துவத்தை உணர்த்துக.

13. (அ) நாட்டுப்புற விளையாட்டுகளில் கபடி பெறுமிடத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) வளைக்காப்புச் சடங்கு குறித்து மக்களின் நம்பிக்கையை விவரிக்க.

14. (அ) கரகமெடுத்தலை வகைகளுடன் விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) பழமொழிகளும் விடுகதைகளும் - தொடர்புப்படுத்துக.

15. (அ) மக்களிடம் காணலாகும் நாட்டுப்புற மருத்துவத்தை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) தெய்வ நம்பிக்கையால் எழுந்த சமூக மாற்றம் குறித்து விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நாட்டுப்புறக் கலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் புலப்படுத்துக.

17. சமூகவியல் நோக்கில் நல்லதங்காள் கதையை விளக்கி வரைக.

18. ஜல்லிக்கட்டு வரலாற்றை இலக்கியங்களின் வழி எடுத்துரைக்க.

19. மதுரைச் சித்திரைத் திருவிழா பற்றிக் கட்டுரை வரைக.

20. தமிழ்நாட்டில் நாட்டுப்புறவியல் பெற்றிருக்கும் வளர்ச்சி வரலாற்றை விளக்குக.

| D–8058 |
|---|

| Sub. Code |
|---|
| 10744 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Fourth Semester

இதழியியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. அரசியலின் நான்காம் கூறு எது?

2. இந்தியாவில் முதன் முதலில் வெளிவந்த செய்தித்தாள் எது?

3. தமிழ் இணையதளத்தின் தந்தை யார்?

4. இந்திய இதழியலின் முன்னோடியைக் கூறுக.

5. பேட்டியின் வகைகளைக் குறிப்பிடுக.

6. செய்திக்குத் தலைப்பிடும்போது கவனிக்க வேண்டியவை எவை?

7. இந்திய பத்திரிக்கை மன்றத்தின் முதல் தலைவர் யார்?

8. தலையங்கத்தின் வகைகளைக் கூறுக.

9. தமிழ் நாளிதழ் விற்பனையில் முன்னிலை வகிக்கும் இதழ் எது?

10. கணினி அச்சுக்கோப்பை எந்த இதழ் பின்பற்றுகிறது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பத்திரிக்கைகளின் பொறுப்புகள் பற்றி குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) உரிமையைப் பாதுகாக்க இதழ்கள் செய்யும் பணிகளை விவரிக்க.

12. (அ) தொடக்க காலத்தில் மனிதன் எவ்வாறு செய்திகளைப் பரிமாறிக்கொண்டான்?

(அல்லது)

(ஆ) பேட்டி எடுத்தல் குறித்து விளக்குக.

13. (அ) தலைப்பின் வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தலையங்கம் எழுதுவோரின் பண்புகளைக் கூறுக.

14. (அ) செய்தி பரப்பும் முறைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) விளம்பர உத்திகளை விளக்குக.

15. (அ) செய்தியாளரிடம் கருவிகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) இதழ்களின் அலுவலகங்களில் செயல்படும் துறைகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடையளிக்க.

16. தகவல் தொடர்பு சாதனங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. தமிழ்நாட்டில் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

18. செய்தி நிறுவனங்கள் பற்றி கட்டுரைக்க.

19. பல்வேறு வகையான செய்திகளைத் திரட்டி எழுதும் முறையை எழுதுக.

20. இதழ்கள் தொடங்குவதற்குரிய வழிமுறைகளை விளக்குக.

| D–8059 |
|---|

| Sub. Code |
|---|
| 10751 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Fifth Semester

பண்டைய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பண்டைய இலக்கியங்களின் பாடுபொருள் என்ன?

2. ‘தானை மறம்’ என்றால் என்ன?

3. கூதிர்காலத்தில் பயன்படாத பொருள்கள் எவை?

4. இமையவரம்பனைப் பாடிய புலவர் பெற்ற பரிசு யாது?

5. செலவு என்றால் என்ன?

6. திருக்குறள் உலகப் பொது நூலாக விளக்குவதற்குரிய காரணங்களில் இரண்டினைக் கூறுக.

7. திருக்குறள் உரையில் புகழ்பெற்றது எது?

8. ‘சால்பு’ எனும் மாளிகையைத் தாங்கும் தூண்களைக் கூறுக.

9. ஈட்டியானுக்குப் பயன்படாத செல்வத்தைக் குறிப்பிடுக.

10. இரவின் கொடுமையைக் கூறுக.

## பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லி செலவு அழுங்கியதைக் கந்தரத்தனார் பாடல் வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) பல்சான்றீரே பல்சான்றீரே - என்ற பாடல் கருத்துகளை விளக்குக.

12. (அ) தலைவன் பிரிந்து சென்ற சுரத்தின் கொடுமையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) நெடுநல்வாடை தலைவனின் கடமையுணர்ச்சியை விளக்குக.

13. (அ) திருக்குறள் - நூல் அமைப்பை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மானம் பொருட்டு இறத்தல் சிறப்பு என்பதை விளக்குக.

14. (அ) பண்புடையாரின் பெருமைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பிறருக்குக் கொடுக்காத செல்வத்தால் ஏற்படும் தீமைகளை விளக்குக.

15. (அ) இரவச்சம் குறித்துச் சான்றுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) உழவு செய்பவரின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடையளிக்க.

16. ஆலூர் மூலங்கிழார் பாடிய பாடாண்தினை பாடல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. வாடைக்காற்றின் கடுமையையும், தலைவியது தனிமைத் துயரையும் நக்கீரர் உணர்த்தும் திறத்தை விளக்கி எழுதுக.

18. ஊழிக்காலம் குறித்துக் கீரந்தையார் கூறும் செய்திகளை விவரிக்க.

19. பெருமை உடையார் சிறுமை உடையாரின் செயல்களைத் தொகுத்தெழுதுக.

20. கயவரின் செயல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

**D–8060**

| Sub. Code |
|---|
| **10752** |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : எழுத்து – இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தொல்காப்பியத்தின் பாயிரத்தை இயற்றியவர்?

2. தொல்காப்பியம் குறிப்பிடும் சார்பெழுத்துக்களின் எண்ணிக்கை?

3. உருபியல் - பெயர்க்காரணம் தருக.

4. தமிழிலுள்ள கூட்டொலிகள் எவை?

5. உயிரெழுத்துப் பிறப்பின் மூன்று முக்கிய நிலைகளைக் கூறுக.

6. ‘அவை+ஐ’ எங்ஙனம் புணரும்?

7. உடன்படும் மெய்களைக் குறிப்பிடுக.

8. குற்றியலுகரப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

9. சாரியையின் வகைகளைக் கூறுக.

10. ‘புளி’ என்னும் கிளவி பெறும் சாரியை யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11\. (அ) தொல்காப்பியப் பாயிரம் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மொழியின் மூன்று வகையைச் சான்றுகளுடன் விவரிக்க.

12\. (அ) உப்பகாரம் ஒன்றன் மொழியே - விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழி முதல் எழுத்துக்கள் குறித்து கருத்துக்களைச் சுட்டுக.

13\. (அ) புணர்ச்சியின் நான்குவகை பாகுப்பாடுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொகை மரபின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துக.

14\. (அ) தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய சொற்களின் புணர்ச்சிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பனங்காய், பனாஅட்டு, பனைக்கொடி ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.

15\. (அ) எல்லாரும், எல்லீரும் ஆகிய சொற்கள் சாரியை பெறுமாற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மரப்பெயர், திசைப்பெயர் புணர்ச்சிகளைச் சான்றுகளுடன் விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழிமுதல் எழுத்துக்கள் குறித்த தொல்காப்பியரின் கருத்துக்களைக் கட்டுரைக்க.

17. எழுத்துப் பிறப்பின் பொது இலக்கணத்தைச் சான்றுகள் தந்து விளக்குக.

18. அளவு, நிறை, எண்ணுப் பெயர்களின் தொகை மரபுச் செய்திகளை எழுதுக.

19. தொல்காப்பிய உயிர் மயங்கியல் செய்திகளைக் கட்டுரைக்க.

20. குற்றியலுகரப் புணர்ச்சி குறித்த கருத்துக்களை விவரிக்க.

| D–8061 |
|---|

| Sub. Code |
|---|
| 10753 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Fifth Semester

ஊடகவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தகவல் தொடர்பின் நான்கு அடிப்படைப் பண்புகளைக் கூறுக.

2. சிறுவர் இதழ்கள் இரண்டினைக் கூறுக.

3. 'விடுதலை' இதழ் யாரால் தொடங்கப்பெற்றது?

4. தமிழில் வெளிவந்த முதல் பேசும்படம் எது?

5. 'நிருபர்' என்ற சொல்லைத் தமிழில் தருக.

6. ஒலி ஊடகம் என்றால் என்ன?

7. இந்தியாவில் பதிப்புரிமை சட்டம் எவ்வாண்டு நடைமுறைக்கு வந்தது?

8. உலக செய்தி நிறுவனங்கள் இரண்டினைக் கூறுக.

9. மின்னணு ஊடகங்களுக்குச் சான்றுகள் தருக.

10. 'Instagram' – தமிழில் மொழிபெயர்க்க.

## பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஊடகவியலின் மூன்று செயல்முறைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) ஊடகவியல் ஆற்றும் முதன்மையான பணிகளை வகைப்படுத்துக.

12. (அ) ஊடகவியலின் வகைகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) குழந்தை இலக்கிய இதழ்களின் மூன்று முக்கியப் பணிகளை விவரிக்க.

13. (அ) செய்தியின் உள்ளடக்க வாய்பாட்டைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தலையங்கத்தின் முக்கியத்துவத்தைச் சான்றுடன் விளக்கி வரைக.

14. (அ) கருப்பொருள் அடிப்படையில் விளம்பரத்தை வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இந்தியாவிலுள்ள இதழியல் சட்டங்கள் குறித்து எழுதுக.

15. (அ) செய்தித் தொலைக்காட்சிகள் மக்களுக்குப் பயன்படுமாற்றை உணர்த்துக.

(அல்லது)

(ஆ) செய்தி செயலிகள் (NEWS APP) குறித்துச் சான்றுகளுடன் விவரிக்க.

## பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஊடகவியலால் ஏற்படும் பயன்களைச் சான்றுகளுடன் விளக்குக.

17. செய்தியாளர்களிடம் இருக்க வேண்டிய பண்புகளைக் கட்டுரைக்க.

18. செய்தித்தாளில் செய்திகள் ஒருங்கமைக்கப்படுமாற்றை எடுத்துரைக்க.

19. சமூக ஊடகத்தில் புலனம் (WhatsApp) பெறுமிடத்தைச் சுட்டியுரைக்க.

20. இணையப் பயன்பாட்டின் அவசியத்தைச் சான்றுகளுடன் விவரிக்க.

---

| D–8062 |
|---|

| Sub. Code |
|---|
| 10754 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : சொல் - சேனாவரையம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே - எவை?

2. மூன்றாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகளைக் கூறுக.

3. வேற்றுமை மயக்கத்தின் வகைகளை எழுதுக.

4. உயர்திணையில் விளியேற்கும் புள்ளியீறுகள் எவை?

5. இயற்பெயர்களின் வகைகளைக் கூறுக.

6. வியங்கோள் வினைமுற்று - விளக்கம் தருக.

7. 'மியர்' – என்னும் அசைச்சொல்லின் வகையைக் குறிப்பிடுக.

8. 'வாள்' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்புப் பொருள் யாது?

9. 'எகினம்' என்ற திரிசொல்லின் பொருளைச் சுட்டுக.

10. பேரறிவு, நீருற்று - ஆகிய சொற்களுக்கு இலக்கணம் குறிப்புத் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11\. (அ) தொல்காப்பியரின் திணை, பால் பற்றியக் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருட்களை விவரிக்க.

12\. (அ) ஆகுபெயர் குறித்து தொல்காப்பியரின் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) விளி ஏலாப் பெயர்கள் பற்றியக் கருத்துக்களை எழுதுக.

13\. (அ) விரவுப் பெயர்களின் பாகுபாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) பெயரெச்சம், வினையெச்சங்களுக்குரிய பொது விதியை விவரிக்க.

14\. (அ) எண்ணிடைச் சொற்கள் குறித்து இடையியல் பேசுமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) குறிப்புப் பற்றி வரும் உரிச்சொற்களைச் சான்றுகளுடன் விவரிக்க.

15\. (அ) செய்யுள் ஒழிபு குறித்து எச்சவியலின் கருத்துக்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) மொழிப்புணர் இயல்புகளை எச்சவியல் வழி விவாதிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாலறி கிளவிகள் குறித்து கருத்துக்களைக் கட்டுரைக்க.

17. வேற்றுமை மயங்கியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. வினைச் சொல்லின் பொதுவிலக்கணத்தைச் சான்றுகளுடன் விவரிக்க.

19. இடைச்சொல்லின் பொதுவிலக்கணத்தை வகைகளுடன் விளக்குக.

20. தொகைச் சொற்களின் வகைகளைச் சான்றுகளுடன் விரித்துரைக்க.

| D–8063 |
|---|

| Sub. Code |
|---|
| 10761 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Sixth Semester

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பிரெஞ்சு ஒப்பிலக்கிய முன்னோடி என அழைக்கப்படுபவர் யார்?

2. கால ஆராய்ச்சி என்னும் நூலின ஆசிரியர் யார்?

3. காரண காரிய ஆய்வின் அடிப்படையான விதி யாது?

4. தமிழில் பின்பற்றப்பட்டு வந்த நால்வகை மொழிபெயர்ப்பு முறைகளைக் குறிப்பிடுக?

5. ஓவிய நூல் குறித்து மணிமேகலையில் இடம்பெறும் தொடர் யாது?

6. திருமுறை என்பதன் பொருள் யாது?

7. சிற்றிலக்கியங்கள் வகைகள் எத்தனை?

8. மனிதனைப்பாடுவேன் என்னும் நூல் எதன் மொழிபெயர்ப்பு?

9. தமிழக அரசின் விருது பெற்ற மு. மேத்தாவின் நூல் எது?

10. காட்டு வாத்து நூலின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இயற்கை அறிவியல் கோட்பாடு என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கிய அணுகுமுறைகள் யாவை?

12. (அ) கூர்தலறக் கோட்பாடு - விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) இலக்கிய ஒருமைப்பாட்டின் அடிப்படைகளை எடுத்துரைக்க.

13. (அ) குரவைக் கூத்தின் தன்மையைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) புதுச் செந்நெறி இலக்கியங்கள் குறித்து எழுதுக.

14. (அ) மணிக்கொடி காலப் புதுக்கவிதைகள் அறிமுகம் செய்க.

(அல்லது)

(ஆ) அகத்திணைப் பாடல் அமைப்புகளை விளக்குக.

15. (அ) வால்விட்மனை அறிமுகம் செய்த பாரதி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியத்தின் பயன்கள் யாவை?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. ஒப்பிலக்கியத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

17. தாக்கக் கோட்பாட்டு ஆய்வு முறைகளை விவரித்தெழுதுக.

18. சிற்றிலக்கியங்களின் தன்மைகளை எடுத்துரைக்க.

19. புதுக்கவிதையின் மூன்று காலகட்டங்களை விளக்கியுரைக்க.

20. தேசிய இலக்கியத்தின் பண்புகளை ஆராய்க.

| D–8064 |
|---|

| Sub. Code |
|---|
| 10762 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Sixth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : பொருள் - இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. கைக்கிளை என்பதன் பொருள் யாது?

2. பிரிவின் வகைகள் யாவை?

3. கலி, பரிபாடலில் இடம்பெறும் மொழி வழக்குகள் யாவை?

4. இயற்கைப் புணர்ச்சியின் படிநிலைகள் யாவை?

5. கற்பில் புலத்தலும் ஊடலும் யாருக்குரியது?

6. நகை நான்கு எவை?

7. உவமங்கள் எவற்றை நிலைக்களனாகக் கொண்டு எழும்?

8. உரியசை எனப்படுவன யாவை?

9. அதுவே தானும் பிசியின் மானும் - எது?

10. நூலின் சிதைவெனப்படும் குற்றங்கள் எத்தனை?

பகுதி ஆ — $(5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கருப்பொருள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கரந்தைத் துறைகள் ஏழினை அறிமுகம் செய்க.

12. (அ) அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) களவில் தலைவமகனது இயல்புகள் யாவை?

13. (அ) இளிவரலும் இளிவரல் பொருளும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உள்ளுரை மற்றும் இறைச்சி பற்றிக் கருத்துக்களை விவரிக்க.

14. (அ) உவமமும் பொருளும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆசிரியப்பாவின் அடிகளாகத் தொல்காப்பியம் குறிப்பனவற்றை விளக்குக.

15. (அ) மாட்டு என்பது யாது? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) உரைவகைகளாகத் தொல்காப்பியர் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

பகுதி இ — $(3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. முதல், கரு, உரிப்பொருள் குறித்துக் கட்டுரை வரைக.

17. வெட்சித் திணை, துறைகளைப் பட்டியலிடுக.

18. பெருந்திணை மெய்பாடுகளை விளக்கியுரைக்க.

19. உவமப் போலி என்றால் என்ன? அதன் வகைகளை விவரித்தெழுதுக.

20. தொல்காப்பியரின் உயிர்ப்பாகுபாட்டை மரபியல் வழிநின்று புலப்படுத்துக.

---

| D–8065 |
|---|

| Sub. Code |
|---|
| 10763 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Sixth Semester

நாடகத் தமிழ்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ஓரங்க நாடகத்திற்குப் பொருந்தும் சில அடிப்படைக் கூறுகள் யாவை?

2. தொல்காப்பியம் குறிப்பிடும் 'கீழ்க்கூத்து' எத்தனை வகைப்படும்?

3. குழந்தை நாடகம் எத்தனை வயதுடையவர்களுக்காக எழுதப்பெறுகின்றது?

4. சீர்திருத்த நாடகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

5. 'தூங்கிக் கிடந்த தமிழுணர்ச்சி துள்ளி எழுந்தது' என்று ஏ.என். பெருமாள் யாரைக் குறிப்பிடுகிறார்?

6. மனோண்மணியம் நாடகத்தின் ஆசிரியர்?

7. விசுவநாத்தாஸிடன் காந்தியடிகள் கூறியது யாது?

8. மாலை - இரவு நேர நாடகங்களை விரும்புவோர் யார் யார்?

9. ‘பாணன் நாடகக் குழுவில் ஒருவன்’ என்று குறிப்பிடும் பத்துப் பாட்டு நூல்?

10. முதல் முதலில் பெண்கள் நாடகக் குழுவை உருவாக்கியவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ் நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) ‘மறைந்த மாநகர்’ நாடகம் கூறும் நிலையாமை கருத்துகளை எடுத்துரைக்க.

12. (அ) நவீன நாடக ஆசிரியர்கள் இருவர் பற்றி குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) அரிச்சந்திர நாடகத்தில் மயானகாண்ட செய்திகளை எழுதுக.

13. (அ) கணேசன் சிவாஜி ஆன வரலாற்றைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) டி.கே. சண்முகம் ஔவை சண்முகம் ஆன வரலாற்றைப் புலப்படுத்துக.

14. (அ) நல்ல தங்கங்காள் நாடகக் கதையைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) பொம்மையின் வீடு என்ற நாடகம் குறித்து விவரிக்க.

15. (அ) சிலப்பதிகாரம் நாடகக்காப்பியம் என்பதற்கான சான்றுகள் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கூத்துப்பட்டறை குறித்துச் செய்தியினை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் நாடகம் பற்றி எடுத்துரைப்பதைச் சுட்டியுரைக்க.

17. நாடக இமையம் சங்கரதாஸ் சுவாமிகள் குறித்துச் சுட்டுரைக்க.

18. இந்திய விடுதலையில் நாடகங்கள் குறித்துத் தொகுத்துரைக்க.

19. கலைஞர் கருணாநிதியின் சமூக நாடகங்கள் குறித்துப் புலப்படுத்துக.

20. விலாச நாடகங்கள் பற்றி விளக்கி வரைக.

| D–8066 |
|---|

| Sub. Code |
|---|
| 10764 |

DISTANCE EDUCATION

B.Lit.,(Tamil) DEGREE EXAMINATION, MAY 2025.

Sixth Semester

விளம்பரக்கலை

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ஆங்கில மொழியில் முதல் விளம்பரம் வெளிவந்த ஆண்டு எது? அதனை வெளியிட்டவர் யார்?

2. பெங்கால் கெசட் என்ற இதழ் எப்பொழுது யாரால் தொடங்கப்பட்டது?

3. DAVP என்பது யாது?

4. பெண்களை நுகர்வோராக மட்டுமே காட்டும் போக்கு நீடிக்கக் காரணம் யாது?

5. விளம்பர ஒலிகளின் நான்கு வகைகள் யாவை?

6. இந்திய விளம்பர தாரர் குழு எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

7. விளம்பரத் துறையில் சிறந்தவர்களுக்கு டைம்ஸ் ஆஃப் இந்தியா வழங்கும் விருது எது?

8. விளம்பரத் தயாரிப்புத் துறையில் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் மூவகைப் பணிகள் யாவை?

9. சலுகை அறிவிப்பு உத்திக்கு இரண்டு சான்றுகள் தருக.

10. பதிப்புரிமைச் சட்டம் எப்போது தொடங்கப்பட்டது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) துண்டு விளம்பர நோக்கங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) தயாரிப்பு பொருள் பற்றிய விளம்பரம் – குறிப்புத் தருக.

12. (அ) செய்தித்தாள் விளம்பரங்களின் நன்மைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சி விளம்பரங்களின் குறைகளைப் பட்டியலிடுக.

13. (அ) விளம்பரத்தின் பணிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) விளம்பர தாரர்கள் அறிந்திருக்க வேண்டியவை யாவை? விளக்குக.

14. (அ) விளம்பரங்களைத் தயாரித்தலில் சாதனங்களைத் தெரிவு செய்வோரின் பணிகள் யாவை?

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சி விளம்பரங்களில் தவறான போதனைகளாக நீவிர் அறிவன யாவை?

15. (அ) விளம்பரங்களில் குழந்தைகள் இடம் பெறுதல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) விளம்பர நிறுவனங்களின் ஒழுக்க நெறிகளைச் சுருக்கி வரைக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. விளம்பரங்களின் வகைகளை விரித்தெழுதுக.

17. வானொலி தொலைக்காட்சி விளம்பரங்களின் நன்மை தீமைகளை எடுத்துரைக்க.

18. விளம்பர நகலின் பகுதிகளை விவரித்தெழுதுக.

19. விளம்பர அறங்களைப் பட்டியலிடுக.

20. விளம்பர உத்திகளை விரித்துரைக்க.